பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
நெ.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை –28.

**சுற்றறிக்கை எண்.04/2023**
**க.எண்.11565/எஸ்1/2013 நாள்.23.05.2023**

பொருள்: தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982 – ஆவண எழுத்தர் கூலி விவரம் – ஆவண எழுத்தர் அலுவலகத்தின் முன் காட்சிப்படுத்திட – அறிவுறுத்தல் – தொடர்பாக.

பார்வை: 1. வணிகவரி மற்றும் பதிவுத்(கே) துறை, அரசு கடித (நிலை) எண்.23, நாள்.10.03.2023
2. பதிவுத்துறைத்தலைவர் கடித எண்.2354/ஐ3/1999 நாள்.10.05.1999
3. பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.7513/எஸ்1/2020 நாள்.25.02.2020

........

தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982–ன் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆவண எழுத்தர் உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் அனைவரும் தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 1982–க்கு கட்டுப்பட்டவர் ஆவார்கள். ஆவண எழுத்தர்கள் தாங்கள் தயாரிக்கும் ஆவணங்களுக்கு பெறப்பட வேண்டிய கட்டணங்கள் தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளுடன் இணைக்கப்பட்ட கட்டண விவர பட்டியலில் வழங்கப்பட்டுள்ளது.

(2). பார்வை 2-ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில் ஆவண எழுத்தர்களுக்கான கட்டண விவரங்களை பதிவு அலுவலகங்களின் அறிவிப்பு பலகையில் வைத்திடவும், திடீர் சோதனைகள் மூலம் கூடுதல் கட்டணம் பெறப்படுகிறதா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் மாவட்டப்பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

(3). பார்வை 3-ல் காணும் சுற்றறிக்கையின் வழி, பொதுமக்களுக்கு ஆவண எழுத்தர்களால் ஆவணம் தயாரிப்பதற்கான கட்டண இரசீது வழங்கப்படுவதில்லை என புகார்கள் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து அனைத்து ஆவண எழுத்தர்களும் தங்களால் தயாரிக்கப்படும் ஆவணங்களுக்கான கட்டண இரசீதினை ஆவணதாரர்களுக்கு தவறாது வழங்க வேண்டும் எனவும் மேற்படி கட்டண இரசீதுடன் ஆவணம் தாக்கல் செய்யப்படுவதை பதிவு அலுவலர்கள் உறுதி செய்து ஆவணப்பதிவு மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் கட்டண இரசீதினை குறிப்பு ஆவணமாக (Reference Document) அந்தந்த ஆவணங்களுடன் ஒளிவருடல் செய்யவும், அலுவலக கோப்பில் கோர்த்து பராமரிக்கவும் சார்பதிவாளர்கள் கோரப்படுகிறார்கள் என்றும் மேற்படி நடைமுறை 01.03.2023 முதல் அமுலுக்கு வருகிறது எனவும், அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களில் இந்த சுற்றறிக்கை விவரத்தினை அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

(4). ஆவண எழுத்தர்கள், பதிவு அலுவலர் மற்றும் பதிவு அலுவலக ஊழியர்களின் பெயரினை தவறுதலாக பயன்படுத்தி பொது மக்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக தொடர் புகார் மனுக்கள் பெறப்பட்டு வருகிறது. ஆவணப்பதிவின் போது ஆவண எழுத்தருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் தொடர்பான விழிப்புணர்வினை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு, சார்பதிவக ஊழியர்கள் முறையற்ற வழியில் கையூட்டு பெறுவதையும், ஆவண எழுத்தர்கள் சார்பதிவாளர்களின் பெயரினை தவறுதலாக பயன்படுத்தி பொது மக்களிடம் தேவையற்ற பணம் வசூலிப்பதனை தவிர்க்கும் பொருட்டும், ஒவ்வொரு ஆவண எழுத்தர் அலுவலகத்தின் முன் ஆவண எழுத்தர்களால் ஆவணத்தை தயாரிப்பதற்கு நிர்ணயித்துள்ள

Verified@RealEstate TM

கட்டணத்தை காட்சி பலகை மூலம் தெளிவு படுத்திவைத்திட தங்களது மாவட்டத்திற்குட்பட்ட ஆவண எழுத்தர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடவும், பார்வை (2) & (3) ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கைகள் ஆவண எழுத்தர்களாலும், பதிவு அலுவலர்களாலும் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளவும் அதனை பின்பற்றாத ஆவண எழுத்தர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் மாவட்டப்பதிவாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/..23.05.2023
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

24/5/2023

கூடுதல் சீட்டுப்பதிவாளர்

24/5/23

பெறுநர்

1. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்.
3. அனைத்து சார்பதிவாளர்கள்

நகல்:

1. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்
2. CS – பிரிவு
   பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
   (இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட)
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Verified @ RealEstate ™

Verified RealEstate™